மேலும், இந்தப் பொருள் பற்றி அடுத்து 1969 ஜனவரி 3 முதல் 8-ம் தேதி வரை ஹைதராபாத்தில் நடைபெற இருந்த தென்மண்டல மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டின் போதும், செய்தி யமைச்சர் நேரில் தொடர்ந்து பேச விரும்புவதாகவும் கூறப்பட்டிருந்தது.

இதுபற்றி முன்னர் செய்தித்துறை அமைச்சர் பொறுப்பு வகித்துவந்த டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்கள் முந்தைய மத்திய செய்தி ஒலி பரப்பு அமைச்சர் திரு ஷா அவர்களுடன் ஹைதராபாத்தில் நேரில் பேசினார்கள். அப்போது திரு ஷா அவர்கள், "அம்மையார் கருதுவது மிகவும் நியாயமாகப் படுகிறது என்றும், அதைப் பரிசீலிப்பதில் கடினம் ஒன்றும் இருக்காது" என்றும் கூறி, அவர்களுடைய பேச்சில் கலந்து கொண்ட அகில இந்திய வானொலி நிலைய தலைமை அதிகாரியிடம் பரிசீலித்துப் பரிந்துரைத்தார். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வெளி வந்துள்ளது.

இந் நிலையில், பத்திரிகைச் செய்திகளின்படி பிப்ரவரி 19-ம் தேதி பாராளுமன்றத்தில் தற்போதைய மத்திய செய்தித்துறை மற்றும் தகவல் அமைச்சர், தமிழக அரசிடமிருந்து காலை நேர ஆங்கிலச் செய்தி அறிக்கை ஒலிபரப்பு நேரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றம் குறித்து அதிகாரப்பூர்வ மான மறுப்புக் கடிதம் வரவில்லை என்பதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் காலஞ்சென்ற அண்ணா அவர்கள் இது பற்றி அன்றைய செய்தி ஒலிபரப்பு அமைச்சரிடம் எடுத்துக் கூறியதாகவும், இந்த மாற்றம் குறித்து எல்லா விதமான காரணங்களுடன் இந்திய அரசியல் கொள்கைகளையும் அமைச்சர் முதல்வருக்கு எடுத்துக் கூறியதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இச் செய்தி பற்றி முதலமைச்சரிடம் நிருபர்கள் கேட்ட பொழுது மறைந்த முதலமைச்சர் அண்ணா ஏற்கனவே தமது எதிர்ப்பைத் தெரி வித்தது பற்றியும் மீண்டும் அன்றைய செய்தித்துறை அமைச்சர் இதுபற்றி மத்திய செய்தி தகவல் அமைச்சருடன் பேசியதையும் முதலமைச்சர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இவ்வரசாங்கம் ஏற்கனவே இது பற்றி உடனடியாக எதிர்ப்புத் தெரி வித்து அவர்களிடம் இருந்து பதிலும் வந்துள்ளது. நேரடியாகவும் இது பற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எவ்வித அதிகாரப் பூர்வ மான தகவலும் தரப்படவில்லை என்று பாராளு மன்றத்தில் அமைச்சர் குறிப்பிட்டதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி வருத்தத்தை அளிக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தச் செய்தி தொடர்பாக புதிய முதலமைச்சரவர்கள் மீண்டும் மத்திய அரசோடு உரையாட இருக் கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இதுபற்றி தொடர்ந்து மத்திய அரசோடு தொடர்பு கொள்ளப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

5. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 22—கதர்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மா னத்தை முன் மொழிகிறேன் :—

"**கோரிக்கை எண் 22**—கதர்* என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,14,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வெட்டுத் தீர்மானங்கள்.

---

* 90–101-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பைக் காண்க.